
கழுகு இறக்கை காருடம்
இந்திரஜால் காமிக்ஸ்
இதழ் 186
டைம்ஸ் ஆஃப் இந்தியா வெளியீடு
விலை விபரம்
தனிப் பிரதிக்கு
ரூ. 1.00
ஆண்டு சந்தா
(தபால் மூலம்)
ரூ.26.00



கழுகு இறக்கைக் காருடம்
!
ஆழநடுக் காட்டில் இருக்கும் கபால குகைதான் வேதாளனின் வீடு. எனினும் நெடுங்காலமாக...
வேதாளர்களுக்கு வேறு மறைவிடங்கள் இருந்தன.
ஐரோப்பாவில்... பாழும் கோட்டைகள்.
அமெரிக்காவிலே 'வாக்கர் பீடம்' எனப்படும் பாலைவனப் பாறை...
?
ஏறுங்களேன்.
நல்லது.



KumarTirupur


நூற்றுக் கணக்கான மைல்களுக்கு, பாலைவனப் பூச்சிகள், விலங்குகள். பறவைகளைத் தவிர வேறு எதுவுமே அங்கு இல்லை...
அதோடு, வதந்திகளும் பேய்பிசாசுக் கதைகளும் அங்கு உலாவின.
பேய்களைப் பற்றிக் கூறுங்கள்.
சிரிக்காதீர்கள். நம்பக் கடினமாக இருக்கிறதோ. இதே இடத்தில் பலர் பேய்களைக் கண்டதுண்டு. ஒரு கிராமம் இங்கிருந்தது ...
கிராமத்தவர் அமைதியான மக்கள், மாடு மேய்த்தார்களாம், வேட்டை ஆடினார்களாம்...


"கிராமத்து வீரன் ஒருவன் அடிதடியில் கலந்து கொண்டான். தற்காப்பு என்று பேசினார்கள்; ஆனால் சிப்பாய் உயிரிழந்தான்..."
"கிராமத்தை விட்டோடினான் வீரன்..."
என்னை அவமதித்தான் சிப்பாய், கொல்லவந்தான்.
உண்மை. கண்டேன்.
சிப்பாய்கள் வருகிறார்கள்.
!
வீரன் போனியைக் காக்கணும்.
ராணுவ நீதி-மன்றம் அவனை தூக்கிலிடுமே!
"தகராறு தொடங்கின சமயம் அது."
சட!
எங்கே வீரன் போனி.
இது அடிக்கடி நடக்கும். அதனால்தான் தண்ணீர் வைத்திருக்கிறேன்.
முன் யோசனை.


இங்குதான் நடந்தது செவ்விந்தியப் படுகொலை.
சொல்லுங்கள் மேலும்.
இதோ... கிராமம் இருந்த இந்த இடத்தில், அறுவடை நாள் பௌர்ணமியன்று பேய் உருவங்கள் நடமாடும்...
ஆ! அந்தப் படுகொலை...
"அவனுடைய இனத்தார் அறிந்திருந்தனர் அவன் நிரபராதி என்று; ஆனால் ராணுவ நீதிமன்றம் விடுமா!"
எங்கே வீரன் போனி?
சே!
ஆளைத் தர மறுக்கிறார்கள், கர்னல் ஸார்!
நம் ஆளைக் கொன்ற காட்டானை விடக்கூடாது. எப்படியாவது பிடித்து வாருங்கள்!


"அறுவடைப் பௌர்ணமியன்று இரவு சிப்பாய்கள் இங்கு வந்தார்கள்."
சரணாகதி அடைகிறேனே.
நம் நாடு. இங்கே நமக்குச் சட்டம் போட இவர்கள் யார்?
போராடு--வோம்!
"வில் அம்புகளைக் கொண்டு குண்டுகளை எதிர்த்தனர்."
கர்னல் ஸார், போனியை அனுப்பமாட்டார்களாம்.
அப்படியா? பார்ப்போம்!
குண்டுகளுக்குப் பிறகு பதில் வரட்டும்.
பீரங்கியா? அடடா!
சரணடைய அனுப்புகிறீர்களா வீரன் போனியை?
மாட்டோம். அவன் நிரபராதி.




KumarTirupur



கொன்றவனைத் தர மறுத்தார்கள். சட்டத்தை நிலைநிறுத்தத் தேவை. பிடிவாதம் செய்தார்கள். கோபம் வந்தது எனக்கு.
அணிவகுத்துத் திரும்புவோம்.
"கைதியைப் பிடிக்க வந்தார்கள் கிராமத்தையே கொன்று குவித்தார்கள். அளவுமிஞ்சிய நடவடிக்கை."
"பிறகு, விசாரணை நடந்து கர்னல் தண்டிக்கப்பட்டான்; என்றாலும் செத்தவர்களைப் பிழைக்க வைக்கமுடியாதே..."
அறுவடைப் பௌர்ணமி இரவு நடந்தது அந்தப் படுகொலை. அதே இரவுகள் செவ்விந்திய ஆவி உருவங்கள் திரும்ப வருகின்றன.
நான் இன்னும் பார்த்தது இல்லை.
இன்று அறுவடைப் பௌர்ணமி. தங்கியிருந்தீர்களானால் பார்க்கலாம்.
ஆம். சவாரிசெய்ய உதவியதற்கு நன்றி, தபால்காரரே.
தவிர, இன்னொரு பேயும் இருப்பதாகச் சொல்கிறார்கள், "வாக்கர் பீடப் பாறை மேலே. நான் பார்த்தது இல்லை. போதுமா சவாரி?
நடந்தே போவேன்.
நடப்பதாம்! எங்கே. 50 மைலுக்கு வீடேது இங்கே! ஓநாயும் இவனும்... விசித்திரம் தான்!


திரும்பிவருகிறேன் இதைச் சொல்ல. 50 மைலுக்கு வீடோ, குடிநீரோ கிடையாது இங்கே. நடந்துபோகத்தான் போகிறீரா?
பரவாயில்லை. நன்றி.
எந்தப் பேயிடம் மாட்டிக் கொள்ளப் போகிறானோ.
தபால்காரனின் கற்பனைக் கெட்டாதவை.
120 ஆண்டுகளுக்கு முன், நாசமாக்கப்பட்ட செவ்விந்தியக் கிராமம்...
மகிழ்ச்சியோடு மக்கள் வாழ்ந்திருந்த இடம் பாழாகக் கிடக்கிறது பாலையாக.
"இன்னொரு பேய் இருக்கிற--தாம் பீடப்பாறைமேல், அதெப்படி இருக்கிறதோ..."
என்னைப் போலிருக்கி-றதாகப் பயந்தானு.



பாறைப் புறமிருந்து ஒரு பாறாங்கல்லை அகற்றினான், குகைக்குள் கிணறும், மேலேற்று விசையும் தெரிந்தன.
"இன்று அறுவடைப் பௌர்ணமி."
அறுவடைப் பௌர்ணமி இரவன்று ஆவி உருவங்கள் மீண்டு வருவதாகக் கூறினானே.
நல்ல பேய்க்கதை, வாலி, படுக்கப் போவோம்...
கண்மூடுகிறான் வேதாளன், அரைத் தூக்கம்... பறையொலிகள் எங்கிருந்தோ மெல்லப் படர்ந்துவரும் பிரமை...
அறுவடைப் பொன்கதிர் நிலவிலே... செவ் விந்தியப் பாடிடத்திலே...



விபரீதங்கள் நடக்கிறதோ...
அறுவடைப் பௌர்ணமி... படுகொலை... கிராமமே நாசம்
தொலைதூரப் பறையொலியும், மணியோசையும் கனவைக் கலக்கின்றன...
வேதாளா...
வேதாளா...
பழங்கால ஆவி உருவங்கள் மீண்டெழுந்தன பாழிடத்திலே...
வேதாளா... வேதாளா...



Kumar Tirupur


இதென்ன விபரீதக் கனவு!
எங்கள் விழாவில் கலந்துகொள்ள வாருங்கள், வேதாளரே. அறுவடைப் பௌர்ணமி விழா!
விழாவா? படுகொலை ஆயிற்றே உங்கள் இனம்.
அது அல்ல. விழா தான். வேதாளரே. நினைவில்லையா. ஆ-கோ-டோன்கா ஏற்றிப்போகும் உங்களை.
நினைவா? ஆ-கோ-டோன்காவா? இது எல்லாம் என்ன, ஷமன்?
பார்ப்பீர்கள், வேதாளரே.
ஓடிவா, ஆ-கோ-டோன்கா மக்களின் கழுகு-ஆத்மாவே!
?


ஆ-கோ-டோன்கா!
!
தூக்கிப்போ இவரை, கழுகாத்மா!
என்ன கனவு?
?!
விந்தைக் கனவு! வேதாள-னைத் தூக்கியபடி பறக்கிறது மகத்தான கழுகு ஆத்மா!


செவ்விந்தியப் பாழிடத்திலே...
?!
ஆ-கோ-டோன்கா... வேதாளரே!
இது பாறைப் பீடம்... செவ்விந்தியக் கிராமத்தில் இருக்கிறேன்... இந்த மக்கள், குடிசைகள்... பேய்களா? கனவுதானோ ?
காவல்காக்கும் கழுகு ஆத்மா. நன்றி.
!
வெள்ளையன் நடத்திய படுகொலையிலிருந்து நாங்கள் அறுவடைப் பௌர்ணமியன்று தப்பியதைக் கொண்டாடுகி- -றோம்.
தப்பினீர்களா?வரலாறு அப்படிக் கூறவில்லையே...
சித்தப் பிரமையா இது, பேய்களுடனு நான்!..


வரலாறு தப்பு. எங்களைக் காப்பாற்றிவிட்டீர்கள் நீங்கள். நினைவில்லையா, வேதாளரே.
1850 ல் அது. அதாவது, 120 ஆண்டுகளுக்கு முன். என் முப்பாட்டனாரின் காலம். என்னதான் நடந்தது?
பாழும் கிராமத்திலே...
அறுவடைப் பௌர்ணமி அன்றிரவு நடந்தவற்றை அப்படியே நடத்திக் காட்டுகிறோம். அந்தக் கால நிகழ்ச்சிகளை...
என் முப்பாட்டனாரைக் குறிப்பிடு- -கிறாரோ?
இதோ வருகிறான் வீரன் போனி...
தகராறு தொடங்கக் காரணமானவன்...
!




KumarTirupur


சிப்பாய்கள் வருகிறார்--களே பீரங்கிக--ளோடு.
சரணடைகிறேனே, ஷமன்.
கூடாது. போனி. நீ அப்பாவி.
நான் சரணடையா-விட்டால் படுகொலை விழுமே.
அவர்களுக்கு நேரம் ஏது? நம் அம்புகளுக்கு முன் நிற்கமுடியாது.
?
பழங்கால நிகழ்ச்சி ஒன்று கனவுபோல் படருகிறது...
நூறு ஆண்டுகளுக்கு முன் என் முன்னவர் இவர்களைப் பாதுகாத்த நிகழ்ச்சி இது. இனி?
பட்டாளம் வருது. காப்பாற்றுங்கள் வேதாளரே.
திடீரென வேறொரு குரல் அவன்மூலமாகப் பேசுகிறது... அவருடைய முன்னோரின் குரல் அது...
என்னோடு வாங்க. பாறைக்குள் பதுங்குங்கள்!
?!


அடட. என் முன்-
-னவரின் குரலா?
நல்ல யுக்தி. என் மக்களை
இட்டுப் போங்கள். நான்
இங்கிருப்பேன்.
நீங்கள் அனைவரும்
மறைந்த பிறகு
சிப்பாய்கள்
பின்தொடர்ந்து
தேடுவார்கள்.
பின்தொடரவோ, தேடவோ
மாட்டார்கள், போங்கள்!
என்ன
செய்கிறான்?
மந்திர-
-வாதி ஷமன்
மந்திரம்
போடுகி-
-றான்.
சிப்பாய்களிடம் தனியே சிக்கப்
போகிறானே. இவனுடைய
மந்திரம் பலிக்குமா?


பீடப் பாறைக்கு வாருங்கள் என்னோடு.
என் முன்னோரின் குரல் பேசுகிறது என்மூலம்.
மந்திரவாதியை பட்டாளத்திற்கு விட்டு விட்டு, மக்கள்கூட்டம் பீடப்பாறை நோக்கிப் போகிறது.
?
பீடப்பாறைக்குள் அந்த மக்களை மறைக்கிறான் வேதாளன்...
சீக்கிரம் வருகிறது படை.
மந்திரவாதி ஷமனை வேதாளன் காண வருகிறான்...
ஏதோ மந்திரம் போடுகிறா- -னாமே...



பாலைவனத்தின் மீது பறந்துவருகிறது கழுகாத்மா!
காக்கவேணும், ஹே... கழுகுத்தேவா, ஆ-கோ- போன்கா.
!
பாழும் கிராம மண்மீது, பூதச்சிறகுகள் உதிர்ந்தன...
சிறகு விழுந்த இடம்தோறும், செவ்விந்தியன் முளைத்தான்.
சிப்பாய்கள் வரும்போது, 'கொல்' மக்கட்திரள் நிரம்பியிருந்தது, செவ்விந்தியக் கிராமம்...
?!
சிப்பாய்கள்... ரெடி !




Kumar Tirupur


அத்தனை பேருமே மாயாஜால வடிவங்கள்... மந்திரவாதி ஷமன் ஒருவனைத் தவிர...
?!
படுகொலை முடிந்தது. அந்தப் பாழும் கிராமத்திற்கு வந்துபார்க்கிறான் வேதாளன்.
அனைவரும் மாண்டாரா?
?!
இறந்த உடல்கள் கழுகின் இறகுகளாக மாறின...
மாய வடிவங்கள் இவை.
ஷமன் மந்திரித்து எழுப்பிய வடிவங்கள்... உண்மையில் இறந்தவன் ஷமன் ஒருவன்தான்.
மக்கள் பதுங்கி--யிருந்த பீடப் பாறையிலே...
பாலைவன மணலில் புதைத்துவிட்டேன். ஷமனை.
காத்தவர் நீங்களே!
தென்திசை போகிறோம். நன்றி!
அசதியோடு உறங்கிப் போனான் வேதாளன்...
ஷமன்... மந்திரம்... முணு முணு... கழுகு இறகுகள் மனிதராக மாறி...


என்ன பைத்தியக்காரக் கனவு! படுகொலையும்... கழுகு ஆவியும்... சிறகுகள் மனிதராக மாறி நின்றதும்... ச-ச-ச... வெறும் கனவு!
பீடப் பாறையிலே கண்ட கனவுக் காட்சிகளை எண்ணிப் பார்க்கிறன் வேதாளன்...
மந்திரவாதி ஷமன்.
சவங்கள் கழுகு இறகுகளாக மாறின ... எல்லாம் மாயம். ஷமன் மட்டும்தான் மெய்... இறந்தவன் அவன்- -தான்.
இப்படி ஒரு கனவு! கழுகுத் தேவன் என்னைத் தூக்கிச் செல்வதுபோல...
என்ன அது?!
BARRY



பெரிய கழுகு இறக்கை!
??!!
செவ்விந்தியப் பாழிடத்தில்...
நேற்றிரவு இவ்விடம் நான் வந்ததும் படுகொலை பார்த்ததும் கனவா, நனவா?
யோ, நண்பரே சவாரி வருகிறீரா?
தபால் சேவை
பிறகு, கபால-குகையிலே... வேதாளகுலச் சுவடிகளில்.
என் முன்னவர் எழுதிவைத்திருக்- -கிறார் 120 ஆண்டுகளுக்கு முன்...
வீரன் போனியை நான் பீடப்பாறைக்கு இட்டுச் சென்றேன். மந்திரவாதி ஷமன் மட்டும் வெளியே பின்தங்கினான் மந்திரம்போட.
கழுகு தேவனின் ஆவி உதிர்த்திட்ட சிறகுகள் மனிதர்களாக மாறின நூற்றுக் கணக்கில்.
"மாய உருவங்களோடு போரிட்டனர் அந்த சிப்பாய்கள். உருவங்கள் விழ்ந்தபின் படை போய்விட்டது. விழுந்த உடல்கள் மீண்டும் சிறகுகளாயின ... ஷமனைத் தவிர..."
நான் கண்டவை யாவும் கனவுகள்தானா?
அல்லது மீண்டும் இன்றிரவு அவை எல்லாம் நடந்தனவா, என்ன?
?



© King Features Syndicate, Inc., 1973. World rights reserved.



KumarTirupur